# ஸூரா அல் பாத்திஹாவின் விளக்கம் – (தொடர் – 04)

## تفسير سورة الفاتحة

**Moulavi M.M.Zaky B.A. (Hons)**

### 2,3) உம்முல் கிதாப், உம்முல் குர்ஆன்

இங்கு "உம்மு" என்ற வார்த்தை, 'அடிப்படை, தூண்' என்ற கருத்துக்களைத் தருகின்றது. ஆகவே, 'உம்முல் கிதாப், உம்முல் குர்ஆன்' என்றால் குர்ஆனின் அடிப்படை என்று பொருள்படும்.
இந்த அத்தியாயத்தை, மேற்கூறிய இரு பெயர்கள் கொண்டும் அழைப்பது கூடுமா கூடாதா என்ற விடயத்தில் அறிஞர்கள் மத்தியில் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. அவையாவன:

அ) 'உம்முல் கிதாப், உம்முல் குர்ஆன்' ஆகிய பெயர்களைக்கொண்டு அதனை அழைக்கலாம். இது பெரும்பான்மையான அறிஞர்களுடைய கருத்து. இதற்கு கீழ்வரும் செய்திகள் ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.
அவையாவன:

**ஹஸ்ரத் அபூஸஈத் அல்குத்ரீ (ரழி) அவர்கள் கூறியதாவது:**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தோழர்களில் சிலர் ஒரு பயணத்தின் போது ஒரு அரபுக் குலத்தாரைக் கடந்து சென்றனர். அவர்கள் அக்குலத்தாரிடம் விருந்தளிக்குமாறு கோரியும் விருந்தளிக்க முன் வரவில்லை. இந்நிலையில் அக்குலத்தாரின் தலைவனுக்கு தேள் கொட்டிவிட்டது. அப்போது அவர்கள் (நபித் தோழர்களிடம்) உங்களிடம் ஓதிப்பார்ப்பவர்கள் எவரும் இருக்கின்றாரா? ஏனெனில் (எங்கள்) குலத்தலைவர் தேள் கடிக்கு உள்ளாகி இருக்கிறார்.' என்று கூறினர்.
இப்போது அவர்களில் ஒருவர், "ஆம்" என்று கூறிவிட்டு அவரிடம் சென்று அவருக்கு, குர்ஆனின் அன்னை (உம்முல் குர்ஆன்) எனப்படும் அல்பாத்திஹா அத்தியாயத்தை ஓதி தமது எச்சிலைக் கூட்டி, (கடிபட்ட இடத்தில்) உமிழ்ந்தார். உடனே அவர் அந்த வலி நீங்கிக் குணமடைந்தார்

(நூல்கள்: புகாரி: 2276,5738, 5749, முஸ்லிம்: 4428,4429)

மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்;
"அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்" என்று ஆரம்பமாகும் அத்தியாயம் உம்முல் குர்ஆனும்,உம்முல் கிதாபும், ஸப்உல் மஸானீயுமாகும்.

நூல்: அபூதாவூத் : 1457, திர்மிதீ : 3137, அஹ்மத் : 9769

மேற்படி ஹதீஸ்களில் இருந்து நபி (ஸல்) அவர்கள், "அல்பாத்திஹா" எனும் முதல் அத்தியாயத்தை, "உம்முல் குர்ஆன், உம்முல் கிதாப்" என்னும் பெயர்களில் அழைத்துள்ளார்கள் என்பது தெரியவருகின்றது. இப்பெயர்கள் இன்னும் பல



www.manaruddawa.org

ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலும் காணப்படுகின்றன.ஆகவே, இப்பெயர்களைக் கொண்டும் இவ்வத்தியாயத்தை அழைக்கலாம்.
ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களும், இன்னும் பல ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்களும் அதனை "உம்முல் கிதாப்" என்று அழைத்து வந்துள்ளனர். அவ்வாறே, இமாம் அல்ஹஸன் பின் அபில் ஹஸன் (ரஹ்) இதனை "உம்முல் குர்ஆன்" என்றே அழைத்து வந்துள்ளார்கள் என இமாம் இப்னு அதிய்யா (ரஹ்) குறிப்பிடுகின்றார்கள்.
மேலும், இமாம் இப்னுல் ஜுஸ்ஸி அல்கலபீ (ரஹ்) தமது அல்குர்ஆன் விரிவுரையிலும், இமாம் மாலிக் (ரஹ்) தமது "அல்முவத்தா" எனும் ஹதீஸ் கிரந்தத்திலும் இவ்வத்தியாயத்திற்கு, "உம்முல் குர்ஆன்" எனத்தலைப்பிட்டுள்ளனர்.

"அல்பாத்திஹா" எனும் அத்தியாயத்தை, "உம்முல் கிதாப்" என்று அழைப்பது விரும்பத்தக்கதல்ல என்று ஹஸ்ரத் அனஸ் (ரழி), இமாம் ஹஸன் பின் அபில் ஹஸன் (ரஹ்), இப்னு ஸிரீன் (ரஹ்) போன்றோர் கருதுவர். இதே கருத்தையே அறிஞர் பகீ்உ பின் மக்லத் (ரஹ்) அவர்களும் கொண்டுள்ளனர்.
அல்- ஹஸன் (ரஹ்) கூறுவதாவது:
உம்முல் கிதாப் என்பது குர்ஆன் கூறும் ஹலால் ஹராம் போன்றவற்றுடன் தொடர்பான வசனங்களைக் குறிக்கும்.
அல்லாஹ் கூறுகிறான்:

مِنْهُ آيَاتٌ مُّحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ

இதில் இருவிதமான வசனங்கள் உள்ளன.ஒன்று, பொருள் நிர்ணயிப்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லாத வசனங்கள். இவை வேதத்தின் அடிப்படை. இரண்டாவது; தெளிவான பொருள்கொள்வதற்கு சிரமமான வசனங்கள். இவை முதஷாபிஹாத் என அழைக்கப்படுகின்றன.

(ஆல இம்ரான்: 03 :07)

ஹஸ்ரத் அனஸ் (ரழி ) அவர்களும் இப்னு ஸிரின் (ரஹ்) அவர்களும் கூறவதவது: "உம்முல் கிதாப்" என்பது இறைவனிடமுள்ள பாதுகாப்பான ஏட்டுகு வழங்கப்படும் பெயராகும்.
அல்லாஹ் கூறுகிறான்;

وَإِنَّهُ فِي أُمِّ الْكِتَابِ لَدَيْنَا لَعَلِيٌّ حَكِيمٌ

மேலும், உண்மையில் இது உம்முல்கிதாபில் (இறைவனிடம் பாதுகாப்பான பலகையில்) பதிவு செய்யப்பட்டுள்ளது. நம்மிடம் உயர்ந்த அந்தஸ்துடையதும், ஞானம் நிறைந்ததுமான வேதமாகும் அது.

(அஸ்ஸுக்ருப்: 43:04)

மேலும், அவன் கூறுகிறான்:

يَمْحُو اللّهُ مَا يَشَاءُ وَيُثْبِتُ وَعِندَهُ أُمُّ الْكِتَابِ

தான் நாடுவதை அல்லாஹ் அழித்து விடுகின்றான்; தான் நாடுவதை நிலைப்படுத்தி விடுகின்றான். அவனிடமே, "உம்முல் கிதாப்" -பாதுகாப்பான பலகை- இருக்கிறது.

(அர்ர:ஃது : 13 ,39)

இவ்விடயம் தொடர்பான பெரும்பான்மையான அறிஞர்களுடைய கூற்றுக்கு அவர்கள் ஆதாரமாகக் கொண்டிருக்கின்ற செய்திகள், இந்த இரண்டாவது - ஹஸ்ரத் அனஸ் (ரழி) , இப்னு ஸீரீன் (ரஹ் ) போன்றோரின் - கூற்றுக்கு மறுப்புக்களாகும். எனவே, இவர்களுடைய கூற்று ஏற்புடையதாகும்.

## இவ்விரு பெயர்களும் வருவதற்கான காரணங்கள்:

ஒரு பிள்ளையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றிற்கு ஒரு தாய் அடிப்படையாக இருப்பது போலவே, அல் குர்ஆன் அத்தியாயங்களுக்கு உம்முல் குர்ஆன் அல்லது உம்முல் கிதாப் என்றழைக்கப்படுகின்ற " அல்பாத்திஹா" அத்தியாயம் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகவே, இவ்வத்தியாயம் தோற்றுவாயாக இருக்கின்றது என்ற காரணத்தினாலேயே இவ்விரு பெயர்களும் வந்துள்ளன என இமாம் பைழாவீ ( ரஹ்), இமாம் பகவி ( ரஹ்) போன்றோர் கூறுகின்றனர்.

இவ்விரு பெயர்களும் வருவதற்கு அறிஞர்கள் இன்னும் பல காரணங்களைக் கூறியுள்ளனர். ஆனால், அவை ஏற்புடையதோ பொருத்தமானதோ அல்ல என்பதனால் அவற்றைத் தவிர்க்கிறோம்.